# ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

# விலைமனுக்கோரல்

## இரத்மலானை, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்காக ஆண்களுக்கான விடுதிக்கட்டிடத் தொகுதிக்கான திட்டமிடப்பட்ட வடிவமைப்பு மற்றும் உருவாக்க கட்டமைப்பு பணிகள்

**ஒப்பந்த இலக்கம் : MOD/KDU/04/2021**

01. பாதுகாப்பு அமைச்சு, அமைச்சின் வழங்கல் குழுவின் தலைவரினால், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், இரத்மலானை, இலங்கையின் துணை வேந்தர் சார்பாக தகுதியான மற்றும் தகைமைகளைக் கொண்ட மனுதாரர்களிடமிருந்து (இலங்கையைச் சேர்ந்தவர்களிடமிருந்து மட்டுமே) மேலே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல்களுக்காக முத்திரையிடப்பட்ட மனுக்களை கோருகின்றது. மனுக்கோரல் செயல்முறை தேசிய போட்டி மனுக்கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.

02. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மீளச்செலுத்தப்படாத ரூபா 50,000 கட்டணத்துடன் எழுத்து மூல விண்ணப்பத்தை **14.02.2022 ஆம் திகதி தொடக்கம் 15.03.2022 ஆம் திகதி வரை** காரியாலய வேலை நாட்களில் மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரை **தலைமை நிதி அதிகாரி (I), பாதுகாப்பு அமைச்சு, இல.15/5 பாலதக்ஷ மாவத்தை, கொழும்பு 03, இலங்கை** இல் கையளிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும். கட்டணத்தை பணம் மூலம் செலுத்த வேண்டும்.

03. தகுதியான மனுதாரர்கள் பின்வரும் முக்கிய தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

அ. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரரின் ICTAD (CIDA) பதிவுகள் பின்வருமாறு.

| நிபுணத்துவம் | தரம் |
|---|---|
| கட்டிட கட்டுமானம் | C1 அல்லது C2 |
| அத்திவாரம் வடிவமைப்பு (தொடர்புடையதாக இருந்தால் மட்டுமே) | GP-B3 அல்லது மேல் |
| கட்டிட சேவைகள் (மின், MVAC, தீ பாதுகாப்பு மற்றும் கண்டறிதல் அமைப்புகள், ICT அமைப்புகள் போன்றவை) | மின் அமைப்புகளில் EM 3 அல்லது அதற்கு மேல் மற்றும் மற்றையவையில் EM 4 அல்லது அதற்கு மேல் |

ஆ. கடந்த ஐந்து ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட கட்டுமானப் பணிகளின் சராசரி ஆண்டு அளவு குறைந்தபட்சம் ரூபா.460 மில்லியனாக அல்லது அதற்கு அதிகமாக இருத்தல் வேண்டும்.

இ. திரவ சொத்துக்கள் மற்றும் / அல்லது கடன் வசதிகளின் குறைந்தபட்ச அளவு, மற்ற ஒப்பந்தக் கடமைகளின் நிகர மற்றும் ஒப்பந்தத்தின் கீழ் செய்யக்கூடிய எந்தவொரு முன்கூட்டிய கொடுப்பனவுகளும் பிரத்தியேகமானவையாகவும் ரூபா.100 மில்லியனுக்கும் குறையாதவாறு இருத்தல் வேண்டும்.

ஈ. கடந்த பத்து ஆண்டுகளில் மனுதாரர் கட்டிட வடிவமைப்பு மற்றும் கட்டிட கட்டுமானங்கள், கட்டிட சேவைகளின் வடிவமைப்பு மற்றும் மின் நிறுவலுக்கான கட்டுமானம், தீ கண்டறிதல் மற்றும் பாதுகாப்பு, ICT வலையமைப்புக்கள் மற்றும் குழாய் மற்றும் வடிகால் பணிகள் போன்ற செயற்பாட்டு திட்டங்களில் குறைந்தது ஒரு திட்டத்தையாவது ஒவ்வொரு செயற்பாடுகளில் முழுமையாக நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

உ. மனுதாரர்கள் கருப்புப்பட்டியலில் இடம்பெற்றிருக்கக்கூடாது.

04. ஆர்வமுள்ள மற்றும் தகுதியான மனுதாரர்கள் மேலதிக விபரங்களை பணிப்பாளர் (காரியாலய வழங்கல்), ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் (தொலைபேசி- 011-2390719, பெக்ஸ்- 011-2632430 மற்றும் மின்னஞ்சல் (directorlogistics@ kdu.ac.lk)

05. மனு ஆவணங்களை எவ்வித கட்டணச் செலுத்துகையும் இன்றி **14.02.2022** ஆம் திகதி தொடக்கம் **15.03.2022** ஆம் திகதி வரை காரியாலய வேலை நாட்களில் மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரை பரீட்சித்துக்கொள்ளலாம். (தொலைபேசி- 011-2390719,, பெக்ஸ்- 011-2390720 மற்றும் மின்னஞ்சல் - procurement@defence.lk

06. மனு தொடர்பான கூட்டம் **26.02.2028** ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், இரத்மலானை, இலங்கை காரியாலயத்தில் இடம்பெறுவதுடன், அதே தினத்தில் வேலைத்தள பரிட்சிப்பும் இடம்பெறும்.

07. மனுக்கள் **16.03.2022** ஆம் திகதி தொடக்கம் **13.07.2022** ஆம் திகதி வரை செல்லுபடியாகும். (மனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதியிலிருந்து 119 நாட்கள்)

08. அனைத்து மனுக்களும் இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியால் வழங்கப்பட்ட ரூபாய் மூன்று மில்லியன் (3,300.000.00) பெறுமதியான மனுக்காப்புறுதியுடன் மனு ஆவணத்தில் வழங்கப்பட்ட படிவத்தின் படி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். மனுக்காப்புறுதி பிணைகள் 10.08.2022 ஆம் திகதி தொடக்கம் 16.03.2022 அம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும். (மனுக்கள் திறக்கப்பட்ட திகதியிலிருந்து 147 நாட்களுக்கு) மனுக்காப்புறுதி பாதுகாப்பு அமைச்சின் செயலாளராருக்கு தலைப்பிட்பட்டிருக்க வேண்டும்.

09. முத்திரையிடப்பட்ட மனுக்களின் முதற்பிரதி மற்றும் நகல்பிரதி ஐ தலைமை நிதி அதிகாரி (I) காரியாலயம், 2ஆவது மாடி, பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே, இலங்கை எனும் விலாசத்திற்கு

| தபாலுறை | தேவைகள் |
|---|---|
| தபாலுறை 1 மற்றும் 03 | ஒரு அசல் மற்றும் இரண்டு நகல்கள் |
| தபாலுறை 2 | ஒரு அசல் மற்றும் இரண்டு நகல்கள் (இரண்டும் மின்னணு மற்றும் கடின நகல்களாக, அனைத்து வர்ண கட்டடக்கலை வரைபடங்களுடன்)* |

* சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து மின்னணு நகல்களின் செயல்பாட்டை மனுதாரர் உறுதிப்படுத்த வேண்டும்.

10. ஒப்பந்த காலம் **250 கலண்டர்** நாட்களாகும்.

11. பூரணப்படுத்தப்பட்ட மனுக்களை **16.03.2022** ஆம் திகதி பி.ப 1430 மணித்தியாலத்திற்கு முன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்கப்பெறுவதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ளல் வேண்டும். அல்லது அம்முகவரியில் மனுக்களை சேகரிப்பதற்காக இடப்பட்டுள்ள பெட்டியில் இடவேண்டும்.

தலைமை நிதி அதிகாரி (I) காரியாலயம்,
2ஆவது மாடி,
பாதுகாப்பு அமைச்சு,
பாதுகாப்பு தலைமையக வளாகம்,
ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே, இலங்கை

காலம் தாழ்த்தி கிடைக்கும் மனுக்கள் நிராகரிக்கப்படும். மனுக்களை ஏற்றுக்கொள்ளும் நேரம் நிறைவடைந்த உடனேயே மனுதாரர்கள் முன்னிலையில், கிடைக்கப்பெற்றுள்ள மனுக்கள் (தபாலுறை 1 மற்றும் 2) திறக்கப்படும்.

12. மனு ஆவணத்தை பெறுவதற்கு முன், 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் (பொருத்தமானதாக இருக்கும்போது) பதிவுச் செய்யப்பட்ட சான்றிதழை சமர்ப்பிக்க மனுதாரர்களுக்கு அறிவுருத்தப்படுகின்றது.

13. மனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்திற்கு மனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளை கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

14. மனுக்களை திறப்பதற்கு கலந்து கொள்பவர்களின் பெயர் மற்றும் தே.அ.அ அல்லது கடவுச்சீட்டு எண்ணை, தலைமை நிதி அதிகாரி(1), பாதுகாப்பு அமைச்சிற்கு, மனுக்களை திறப்பதற்கு மூன்று காரியாலய நாட்களுக்கு முன்னதாக (03 நாட்கள்) எழுத்து மூலமாக அறியத்தர வேண்டுமென்பதை மனுதாரர்களுக்கு அறியத்தருகின்றோம். மேலும் இம்மனுக்கோரல் தொடர்பில் பிற செயற்பாடுகளில் பங்கேற்பவர்களின் பெயர் மற்றும் தே.அ.அ அல்லது கடவுச்சீட்டு எண்ணை தலைமை நிதி அதிகாரி(1), பாதுகாப்பு அமைச்சிற்கு அறிவித்திருத்தல் வேண்டும்.

**தலைவர்**
**அமைச்சின் வழங்கல் குழு,**
**பாதுகாப்பு அமைச்சு,**
**பாதுகாப்பு தலைமையக வளாகம்,**
**ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே, இலங்கை**